சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – கிருஷ்ணகிரி மாவட்டம் – ஊத்தங்கரை வட்டம் – அத்திப்பாடி கிராமம் – புல எண்.103/25 – நத்தம் புறம்போக்கு – டாக்டர்.அம்பேத்காரின் வெண்கலத்திலான முழு உருவச்சிலையை நிறுவுதல் – அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ஊ.2.) துறை**

அரசு ஆணை (நிலை) எண். 114 நாள் 5.10.2009.

படிக்கப்பட்டது.

1. அரசு கடித எண்.15611/சி3/94–6, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 12.6.1995.
2. அரசு ஆணை (நிலை) எண்.248, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 23.11.1998.
3. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித ந.க.22408/09/சி1, நாள் 3.8.2009.

ஆணை:-

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், அத்திப்பாடி கிராமத்தில் புல எண்.103/25 நத்தம்புறம்போக்கு புலத்தில் டாக்டர் அம்பேத்கார் முழு உருவ வெண்கலச்சிலை அமைப்பதற்கு, மேற்படி கிமத்தைச் சேர்ந்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினரும், ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்களும் அனுமதி கோரியிருந்தனர்.

2. மேற்படி புலத்தில் டாக்டர் அம்பேத்கார் சிலை அமைப்பதற்கு பொதுமக்கள் தரப்பில் இருந்து எவ்வித ஆட்சேபணையும் இல்லை எனவும், இச்சிலை அமைப்பதால் போக்குவரத்திற்கு இடையூறு ஏதுமில்லை எனவும், கிருஷ்ணகிரி வருவாய் கோட்ட அலுவலர் தனது புலத்தணிக்கை அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேற்படி புலத்தில் கிராம நிர்வாக அலுவலர், அலுவலகம் முன்பாக டாக்டர். அம்பேத்கார் சிலை அமைப்பது தொடர்பாக அத்திப்பாடி ஊராட்சி மன்ற தலைவர் 16.6.2009 அன்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளது எனவும், இப்புலத்தில் சிலை அமைக்க பொது மக்கள் ஆட்சேபணை ஏதும் இல்லை எனவும், மேற்படி இடத்தில் சிலை அமைப்பதால் போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூறு ஏதும் இல்லை எனவும், மேற்படி புலத்தில் சிலை அமைக்க காவல்துறை சார்பாக எவ்வித ஆட்சேபணையும் இல்லை எனவும் கிருஷ்ணகிரி காவல் கண்காணிப்பாளர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். ஆகவே கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், அத்திப்பாடி கிராமத்தில் புல எண்.103/25 நத்தம் புறம்போக்கு புலத்தில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் முன்பு டாக்டர் அம்பேத்கார் முழு உருவ வெண்கலச்சிலை நிறுவ அரசின் அனுமதி அளிக்க கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

த.பி.பா/–

**3.** கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவை, மேலே படிக்கப்பட்ட ஒன்று மற்றும் இரண்டில் குறிப்பிடப்பட்ட அரசுக் கடிதம் மற்றும் அரசு ஆணையின்படி அரசு நன்கு ஆய்வு செய்து, மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரையினை ஏற்று கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், அத்திப்பாடி கிராமத்தில் புல எண்.103/25–ல் உள்ள நத்தம் புறம்போக்கு நிலத்தில் டாக்டர் அம்பேத்கார் முழு உருவ வெண்கலச் சிலை அமைக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

1. டாக்டர். அம்பேத்கார் சிலையை வெண்கலத்தில் மட்டுமே செய்து உயர்ந்த பீடம் அமைத்து வைக்க வேண்டும்.
2. சிலையை சுற்றி நான்கு பக்கமும் இரும்பு கம்பிவேலி அமைத்து பாதுகாக்கப்பட வேண்டும்.
3. கம்பி தடுப்பு நல்லமுறையில் அழகுற அமைக்கப்பட வேண்டும். சிலை உள்ளே அடைப்பட்டது போல அமைக்கப்பட கூடாது.
4. சிலை அமைக்க குழு ஒன்று அமைக்க வேண்டும். சிலையை இக்குழுவினரே பராமரிப்பு செய்ய வேண்டும். பராமரிப்பு செலவினை அவர்களே ஏற்று சரி செய்து கொள்ள வேண்டும்.
5. போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வண்ணம் சாலை மற்றும் பொது வழிகளிலிருந்து தகுந்த இடைவெளியுடன் சிலை அமைய வேண்டும்.
6. பொதுமக்களின் அன்றாட பணிகளுக்கு இடையூறு நேராத வண்ணம் சிலை மைக்க வேண்டும்.
7. இச்சிலை மேற்கூறிய நிபந்தனைகளுக்குட்பட்டு, அத்திப்பாடி கிராம புல எண்.103/25 கிராம நத்தம் புறம்போக்கு புலத்தில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் முன்பு குறிப்பிடப்பட்ட எல்லைக்குள் அமைய வேண்டும்.
8. புல எண்.103/25ல் அமைந்துள்ள சிங்காரப்பேட்டை நீப்பத்துரை செல்லும் தார் சாலைக்கு தெற்கிலும்,

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஆணையாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை – 15.
மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி மாவட்டம்.
மாவட்ட காவல் கண்காணிப்பாளர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

<u>நகல்</u>
பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு) துறை, சென்னை – 9.
முதலமைச்சர், அலுவலகம், சென்னை – 9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊர் நகராட்சி அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.